Reg. No. : ......................................

Name : ...........................................

**FY-212**

**FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, SEPTEMBER 2021**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 20 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 20 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 6 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் மூன்றனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம் (3 × 1 = 3)**

1. *ஆற்றுதல் என்பது.*
   (அ) அலர்ந்தார்க்கு உதவுதல் (ஆ) மறைபிறர் அறியாமை
   (இ) கூறியது மாறாமை (ஈ) பாடு அறிந்து ஒழுகுதல்

2. எண்வகை மெய்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டும் நூல்
   (அ) கலித் தொகை (ஆ) புறநானூறு
   (இ) தொல்காப்பியம் (ஈ) சிலப்பதிகாரம்

3. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் வரிகள் அமைந்த நூல்.
   (அ) அகநானூறு (ஆ) புறநானூறு
   (இ) திருக்குறள் (ஈ) இராமாயணம்

4. 'சொல்லாக்கதை' என்ற கவிதையை எழுதிய கவிஞர்
   (அ) தமிழச்சி (ஆ) திலகபாமா
   (இ) சல்மா (ஈ) வெண்ணிலா

5. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் இவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(அ) ஐம்பெருங்காப்பியங்கள் (ஆ) ஐம்பூதங்கள்

(இ) ஐவகைநிலங்கள் (ஈ) ஐம்புலன்கள்

6. பெண்களின் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குவது.

(அ) புனைவியல் (ஆ) மகளிர் அணி

(இ) நவீனத்துவம் (ஈ) பெண்ணியம்

**7 முதல் 14 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றோ இரண்டோ வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம் (4 × 2 = 8)**

7. 'வில்லுப்பாட்டு' என்ற நாட்டுப்புறக்கலை குறித்து சிறுகுறிப்பு எழுதுங்கள்.

8. சி. வைதாவின் தமிழ்ப்பணி இரண்டினை எழுதுங்கள்.

9. கண்டல் காடுகளை வளர்ப்பதன் தேவைகளைப் பெட்டிச் செய்தியாக எழுதுங்கள்.

10. மூன்றாம் உலகப்போரில் கதாபாத்திரமான எமிலியின் பாத்திரப் படைப்பைச் சுருக்கமாக எழுதுங்கள்

11. தமிழர்களிடையே காணும் சிறந்த இரண்டு பண்பாட்டினை எழுதுங்கள்.

12. "போர்க்குறிக் காயமே புகழின்காயம்
யார்க்கது வாய்க்கும் ஆ! ஆ! நோக்குமின்"
மனோன்மணியத்தில் இடம் பெறும் இக்கூற்று யார்யாரிடம் கூறியது?

13. 'தலித்தியம்' கடைக்கோடி மக்களுக்கு எவ்வகையில் உதவுகிறது என்பதை சிறு குறிப்பாக எழுதுங்கள்.

14. "சாக்ஷிப் படிகளும் சமன்ஸூப் படிகளும்
கணக்கிலடங்கா கமிஷன் படிகளும்" – இவ்வரிகளில் அமைந்த பிறமொழிச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.

**15 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 5 வினாக்களுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்**

**(5 × 4 = 20)**

15. நமது பாடப்பகுதியில் இடம் பெறும் புனலும் மணலும் கட்டுரை எழுதிய மறைந்த எழுத்தாளர் ஆ. மாதவனை நினைவுகூறும் வகையில் நினைவேந்தல் உரைதயார் செய்யுங்கள்.

16. பொருத்தி எழுதுங்கள்.

காடும் காடுசார்ந்த இடமும் – நெய்தல்

மலையும் மலைசார்ந்த இடமும் – முல்லை

வயலும் வயல்சார்ந்த இடமும் – குறிஞ்சி

கடலும் கடல் சார்ந்த இடமும் – மருதம்

17. தமிழ் இலக்கியம் காட்டும் இயற்கை அழகினை ஏதேனும் இரண்டினை எழுதுங்கள்.

18. சிலப்பதிகாரம் காட்டும் திருமண விழாவினை இன்றைய திருமண விழாவுடன் பண்பாடு அடிப்படையில் ஒப்பிட்டு எழுதுங்கள்.

19. தெருக்கூத்துக் கலைகள் நலிவடையாமல் தடுத்திட சில வழிமுறைகளை எழுதுங்கள்.

20. பண்டைய இலக்கியங்களும் இன்றைய இலக்கியங்களும் பாடு பொருள்களில் எவ்வாறு மாறுபடுகின்றன என்பதை விளக்குங்கள்.

21. வைகுண்ட வைத்தியர் போன்ற போலி மருத்துவர்களை நம்பி ஏமாந்துவிடக்கூடாது என்பதை உணர்த்தும் விழிப்புணர்வு செய்தி தயார் செய்யுங்கள்.

22. 'பெண்களைக் கொண்டாடுவோம்' என்ற தலைப்பில் பேசிட தொலைக்காட்சி உரை தயார் செய்யுங்கள்.

23. "சாலையோரம் கிடக்கிறது

அந்தக் காக்கை

அநாதைப் பிணமாக –!

மனிதன் இறந்துகிடந்தால்

காவலர் துக்கிச் செல்வர்

அற்பப் பறவையிது

கவனிப்பாரில்லை!" – இக்கவிதை வரிகளில் வெளிப்படும் உணர்வினை எடுத்து எழுதுங்கள்.

24. 'ஆதியில் சொற்கள் இருந்தன' என்ற கவிதை மூலம் குழந்தைகள் உலகத்தை உணர்த்திய கவிஞர் வெண்ணிலாவுடன் கலந்துரையாடல் நிகழ்த்திட வாய்ப்புக் கிடைத்தால் அவரிடம் வினவிட நான்கு வினாக்கள் தயார் செய்யுங்கள்.

**25 முதல் 30 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 3 வினாக்களுக்கு ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 5 வீதம் (3 × 5 = 15)**

25. தூய தமிழில் எழுதுங்கள்.

"என்னாங்க! இந்த எலிகள் தொந்தரவு பெரிசாப் போச்சு நேத்து ராத்திரி என் துணியெல்லாங் கிழிச்சுட்டுதுங்க! இப்பவும் உக்கிராண அறையில் இரண்டு மூன்று சேர்ந்து கொண்டு காபுரா பண்ணிக் கொண்டிருக்குதுங்க. அந்த பூனையை நீங்க கொடுத்து விட்டது தப்பு. வேறு பூனை வாங்கிகினு வரட்டுமா?"

26. நயம் பாராட்டுங்கள்

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து

நிலவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்

கோலமுழுதம் காட்டி விட்டால் காதற்

கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்

சோலையிலே பூத்த தனிப் பூவோ நீ தான்!

சொக்க வெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ!

– பாரதிதாசன்

27. "இயற்கை மாசுபடக்காரணம் வாழ்க்கை வசதிகள் பெருக்கமே / மக்களின் அலட்சியமே!" ஏதேனும் ஒரு தலைப்பில் பேசிட பட்டிமன்றக் குறிப்புகள் தயார் செய்யுங்கள்.

28. 'தமிழர் பண்பாடு உலகளாவியது'– என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுங்கள்.

29. நாடகக் கலையின் சிறப்புகளைக் குறித்து வானொலி மாணவர் நிகழ்ச்சியில் பேசிட உரை தயார் செய்யுங்கள்.

30. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையாக எழுதுங்கள்.

பெயர் – சி. வை. தாமோதரம் பிள்ளை

பிறப்பு – 12-9-1832 இலங்கை புத்தூர்

கல்வி – முத்துக்குமாரக் கவிராயரிடம் தமிழ் இலக்கணம்

அமெரிக்க மிசன் கலாசாலையில் ஆங்கிலம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பல்கலைக் கல்லூரி

மேற்படிப்பு சென்னையில் பி.ஏ. படிப்பு

1871ல் சட்டப்படிப்பு

பணிகள் – ஆசிரியர், தினவர்த்தமானி இதழில் துணையா

மொழிபெயர்ப்பாளர், பத்திரிகை ஆசிரியர்,

புதுக்கோட்டை முறைமன்ற நடுவர்,

பாடத்திட்டக் குழு உறுப்பினர்.

விருதுகள் – 1885 இராவ்பகதூர் விருது.

**31 முதல் 36 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 3 வினாக்களுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம் (3 × 6 = 18)**

31. *இன்றைய தொற்று நோய் காலங்களில் நிகழ்த்து கலைகளை வளர்ப்பது பெரும் பிரச்சனையாக உள்ளது. சமூக வலைத்தளங்கள் மூலம் கலைகளை வளர்த்திட சில வழிமுறைகளைத் தொகுத்து எழுதுங்கள்.*

32. *புதியகலை, புதியவடிவம், புதிய இலக்கியம் என்று அமைவதே புதிய படைப்புகள். இதைப்போன்று நவீன இலக்கியம் முன்வைக்கும் கருத்து நிலைகளைப் பட்டியலிடுங்கள்.*

33. *மணிமேகலை நூல் காட்டும் இந்திரவிழா நிகழ்வினை விவரித்து எழுதுங்கள்.*

34. *கவிஞர் சிற்பியின் மனதில் அவரது கிராமத்து நதி நினைவுகளை அள்ளித் தருவது போல நீங்கள் பார்த்த ஏதேனும் ஓர் இடம் தரும் நினைவுகளை வருணிந்து எழுதுங்கள்.*

35. *"என்ன கொடுமை இது! யுகம்யுகமாய் உயிர்கள் படைத்த இயற்கை ஒரே நாளில் அழிக்கப் பார்க்கிறதா? மனிதர்கள் வாழ முடியுமா விலங்குகளும் பறவைகளுமற்ற உலகத்தில்?" வைரமுத்துவின் மூன்றாம் உலகப் போர் புதினத்தில் வரும் இவ்வரிகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுங்கள்.*

36. *மனிதர்களால் ஏற்படும் சுற்றுச் சூழல் சீர்கேட்டினைக் குறித்து தலையங்கம் எழுதுங்கள்.*

**37 முதல் 40 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்**

**$(2 \times 8 = 16)$**

37. வாசிப்பவர்களின் மனதைக் கவரும் வகையில் இலக்கியங்கள் அமைகின்றன. இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் எடுத்துக்காட்டுகளுடன் திறனாய்வுக் கட்டுரை எழுதுங்கள்.

    *(இன்பச்சுவை, காதற்சுவை, வீரச்சுவை, நகைச்சுவை)*

38. நாட்டுப்புறக் கலைகளை உலகறியச் செய்யும் வண்ணம் கலை இலக்கிய விழாவில் பேசிட சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

    *(படையணி, தெய்யம், தெருக்கூத்து, ஒயிலாட்டம்)*

39. *"மிக நெருங்கிய பரிசயமுண்டெனினும்*

    *ஒரு நாளும் அது என்னிடம்*

    *தன் முகத்தோடு வந்ததில்லை" – கவிஞர் சல்மா*

    பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகள் தொடர்பான இக்கருத்தினை விமர்சனக் கட்டுரையாக எழுதுங்கள்.

    *(சமூக வலைத்தளங்கள், பாலியல் தொல்லைகள், பொய்யான வாக்குறுதிகள்)*

40. பயணக்கட்டுரைகள் பிறநாடுகளுக்குச் செல்லாதவர்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றன என்ற கருத்தினை விளக்கி எழுதுங்கள்.

    *(பயணச் செலவு, வசதிகள், இடங்கள், சிறப்புகள்)*

---